DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: DVC.No.3/2022**

Deposition of witness for Prosecution எ.ம.சா.1

Name : தியாகராஜன்
Father/ Husband Name : சீனிவாசன்
Village :
Taluk :
Calling :
Age :

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 12.11.2025.

சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல்விசாரணை:-**

நான் இவ்வழக்கின் 2-ம் எதிர்மனுதாரர் ஆவேன். என்னுடைய முதல் விசாரணையை பிராமாணபத்திரிக்கையாக தாக்கல் செய்துள்ளேன். பிராமாணபத்திரிக்கையில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள விவரங்கள் நான் சொன்னவை தான்.

**குறுக்கு விசாரணை:**

1. நிருபண வாக்குமூலத்திற்கான விவரம் யார் சொன்னது என்றால் நானும் என் மகனும் சொன்னோம். மேற்படி விவரத்தை எப்போது நானும் எனது மகனும் சொன்னோம் என்றால் நான் 1-2 மாதங்களுக்கு முன்பு சொன்னேன். மனுவுக்கு நான் எதிருரை தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் போடவில்லை என் மகன் தாக்கல் செய்துள்ளார். நிருபண வாக்குமூலத்தில் உள்ள 1-ம் மனுதாரர் மீதான குற்றச்சாட்டுகள் பற்றிய விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. நான் சொல்லியுள்ள குற்றச்சாட்டுகளுக்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1ம் மனுதாரர் பாலியல் தொழில் செய்து பல ஆண்களை ஏமாற்றி வருவது வாடிக்கையாகி உள்ளது என்று எந்த அடிப்படையில் சொன்னேன் என்றால் 1ம் மனுதாரர் தொடர்பில் இருந்த பையனின் அப்பா, அம்மா, அக்கா ஆகியோர் இருந்து 1ம் மனுதாரரை கண்டித்து வைக்குமாறு

சொன்னபோது தான் தெரியும். அதன் அடிப்படையில் தான் நான் மேற்படி விவரத்தை கூறினேன்.

2. மேற்படி அப்பா, அம்மா, அக்கா ஆகியோரின் பெயர் மற்றும் ஊர் சொல்லமுடியுமா என்றால் ஊர் தானாவயல் அப்பா பெயர் சுப்பிரமணியன், அம்மா பெயர் தேன்மொழி, அக்கா பெயர் பரமேஸ்வரி. எந்த தேதியில், எந்த வருடத்தில் மேற்படி விவரங்களை என்னிடம் சொன்னார்கள் என்றால் தேதி ஞாபகமில்லை. கார்த்திக் என்ற கள்ளக்காதலன் போட்டோ ஒன்றை வாட்ஸ்அப்பில் 1ம் எதிர்மனுதாரரின் போனிற்கு அனுப்பியதாக சொல்லப்படும் போட்டாவை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. கார்த்திக்கும், 1 வது மனுதாரரும் எந்த வருடத்தில், எந்த தேதியிலிருந்து வாடகைக்கு வீடு எடுத்து வசித்து வருகிறார்கள் என்றால் தேதி எனக்கு ஞாபகமில்லை.

3. 1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையில் சீர்வரிசை பொருட்களை 1ம் மனுதாரர் வாங்கிவிட்டு சென்றுவிட்டதாக சொல்லியுள்ள நிலையில் நான் நிருபண பிரமாண பத்திரிக்கையில் எதன் அடிப்படையில் 1ம் மனுதாரர் நகைகளை வாங்கி சென்றதாக சொல்கிறேன் என்றால் அவர் அனைத்து பொருட்களையுமே வாங்கி சென்றுவிட்டார். சீர் வரிசை பொருட்களை 26.12.2021-ம் தேதி தேவகோட்டை மகளிர் காவல் நிலையத்தில் நகைகளை பெற்றுக் கொண்டதாக என்னுடைய நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது சரியா என்றால் நகைகள் 1ம் மனுதாரரிடம் தான் தொடக்கத்தில் இருந்தே உள்ளது, சீர் வரிசை பொருட்களை தான் போலீசார் முன்னிலையில் பெற்றுக் கொண்டார். நிருபண வாக்குமூலத்தில் என் மகன் 1ம் மனுதாரரையும் குழந்தைகளையும் தனிக்குடித்தனம் வைத்ததாக சொல்லும் வீடு எங்குள்ளது என்றால் தானாவயலில் என் வீட்டிலிருந்து 3 வீடுகள் தள்ளி உள்ளது. தனிக்குடித்தனம் சுமார் 6 வருடங்களாக இருந்து வருகிறார்.

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்
தேவகோட்டை.